தொகுதி-8 எண் 1
Vol. 8 No. 1

***Chief Editor***
*Dr. M. Sadik Batcha*

***Advisory Editor***
*Dr. N. Chandra Segaran*

***Editorial Board***
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr. M. Pandi*
*Dr. G. Stephen*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedka*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr. Vaani Arivalan*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. S. Thangamani*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

மார்கழி 2050 - பங்குனி 2051
January - March 2020
ISSN : 2321-984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
(UGC-CARE List )

***Published by***
**RAJA PUBLICATIONS**
**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

**23**

தொகுதி-8 எண் 1
**Vol. 8 No. 1**

**மார்கழி 2050 - பங்குனி 2051**
**January - March 2020**

**ISSN : 2321 - 984X**


| | | | |
|---|---|---|---|
| 1. | பொ. அருள் | சங்க இலக்கியத்தில் மருதநில மக்களின் அணிகலன்கள் | 1-6 |
| 2. | ந. தமிழ்மொழி | மதிப்பியல் கல்வி | 7-12 |
| 3. | வாணி அறிவாளன் | அகநானூற்றுத் தொகுதிப் பெயரீடுகளுக்கான காரணம் என்ன? | 13-24 |
| 4. | S. RAVI | A STUDY ON ROLE OF GROUNDWATER IRRIGATION IN AGRICULTURE DEVELOPMENT WITH SPECIAL REFERENCE TO TAMIL NADU DISTRICTS | 25-31 |
| 5. | பா. சந்திரமோகன் | தச்சநாடமூப்பன் திராவிட பழங்குடியின மக்களின் மொழி-ஓர் மொழியியல் ஆய்வு | 32-39 |
| 6. | J. THARMARAJ | THE CONTRIBUTION OF FR. ESCANDE TO PONDICHERRY EDUCATION | 40-44 |
| 7. | பா.விஜயகுமார் | சிறுவர் இலக்கியமும் கதைப் பொருண்மையும் | 45-49 |
| 8. | ஜெ.அரவிந்தன் | மாலதி மைத்ரியின் நீரின்றி அமையாது உலகு காட்டும் பெண்ணியம் | 50-54 |
| 9. | மு. புவனா & நா. பிரியா | இன்றைய கவிதைகள் சுட்டும் பெரியாரின் பெண் விடுதலை | 55-58 |
| 10. | DEEPAN. A, & J. ARUL SURESH | A STUDY ON AWARENESS AND PROBLEMS FACED BY THE ACADEMICIANS WHILE FILING THEIR INCOME TAX RETURNS IN CHENNAI CITY | 59-66 |
| 11. | சு. லெட்சுமி | திருமந்திரத்தில் அணைந்தோர் தன்மை | 67-70 |
| 12. | மு. கிருஷ்ணமூர்த்தி மு. சாதிக் பாட்சா | கூத்தராற்றுப்படையில் (மலைபடுகடாம்) சமூக உளவியல் | 71-78 |
| 13. | சு. இளவரசி | நெய்தல் நிலப் புதினங்கள் காட்டும் மக்களின் பண்பாட்டு வாழ்வியல் | 79-83 |
| 14. | கி.ச. சங்கீதா & ச. ரேவதி | குமுதம் - தீரா நதி - கவிதை படைப்புகளில் பன்முகத்தன்மை | 84-88 |
| 15. | க.காயத்ரி & த. மரகதம் | திருக்குறளில் உரிச்சொற்கள் | 89-93 |
| 16. | D. KARPAGAVALLI | AN ANALYSIS OF CHALLENGES AND OPPORTUNITIES WOMEN ENTREPRENEURSHIP IN INDIA: AN OVERVIEW | 94-101 |
| 17. | A. MUTHUKUTTI | THE ROLE OF PAPANASAM HILL TRACTS IN PROMOTING TOURISM IN TIRUNELVELI DISTRICT | 102-109 |
| 18. | ப. எழில்முருகன் & ஜெ. ராஜேந்திரன் | தமிழக ஓவியங்களின் தொன்மையும், வரலாறும் - ஓர் ஆய்வு | 110-117 |
| 19. | சௌ. சுசேந்திரன் & மு. பற்குணன் | இளையோர்கள் வளர்ச்சியில் புதுக்கோட்டை நேருயுவகேந்திரா | 118-123 |
| 20. | ந. எழிலரசன் | தமிழ்விடு தூதில் தொன்மக் கதைகள் | 124-128 |
| 21. | S.R.SHREE SUBRADEEPPAN & S. SALEEMA RABIYATH | KAAKA MUTTAI : THE REFLECTION OF THE SOCIETY | 129-132 |
| 22. | C. EZHIL ARASU & T. SESHASAYEE | THE MARXIST PERSPECTIVE ON RELIGIOUS PHILOSOPHIES | 133-153 |
| 23. | எஸ்.ஆர். ஸ்ரீ சுப்ரதீபன் | ஆடுகளம் படத்தில் கலாச்சார பிரதிபலிப்பு | 154-162 |
| 24. | A. ANITHA PONMUDI & G. MANIVANNAN | THE IMMIGRATION EXPERIENCES IN MEENA ALEXANDER'S *MANHATTAN MUSIC* | 163-168 |
| 25. | பாலசுந்தரம் இளையதம்பி | பண்டைத் தமிழரின் இசைத்தமிழ் விளக்கமே யாழ் நூல் | 169-174 |
| 26. | கோ. செந்தமிழ்ச்செல்வி | நற்றிணை ஐந்திணையில் அழகியல் புனைவு | 175-179 |
| 27. | சு. செல்வகுமாரி | சிலம்பில் பெரும்பொழுது வருணனைகள் | 180-184 |
| 28. | P. BALAKRISHNAN | SOCIO - ECONOMIC CHARACTERISTICS OF HANDLOOM WEAVERS IN TAMIL NADU STATE : A STUDY OF ERODE DISTRICT | 185-194 |
| 29. | பூ. கலைவாணி | புறநானூறு காட்டும் பண்பாடு | 195-200 |
| 30. | P. MALARVIZHI | AESTHETICS OF RELIGION UNDER MADURAI NAYAK DYNASTY | 201-207 |
| 31. | ந.விஜயசுந்தரி | பெட்டவாய்த்தலை அருள்மிகு ஸ்ரீ சோமகாளி அம்மன் திருக்கோயில் சிறப்பியல்புகள் | 208-212 |
| 32. | தே.ராஜகுமார் | பத்துப்பாட்டில் விலங்கியல் பதிவுகள் | 213-218 |
| 33. | அ. அம்பேத்கார் | நடுகற்களில் வாணர் | 219-228 |
| 34. | க. வெங்கடசுப்பிரமணியன் | தமிழ்ப் புதினங்களில் மீனவர்களின் வாழ்வியல் | 229-233 |
| 35. | ப.கலாவதி | ஆற்றுப்படை நூல்களில் சுற்றுச்சூழல் | 234-238 |
| 36. | சி. ஆரோக்கிய தனராஜ் | நடுகற்களும் வழிபாட்டு முறைகளும் | 239-242 |
| 37. | நா. சந்திரசேகரன் | தமிழ்ப்பண்பாட்டு விளிமுறைமைகள் | 243-249 |
| 38. | இரா. ஈஸ்வரி | தற்கால கவிதைகளின் செல்நெறிகள் | 250-256 |
| 39. | ச. பிரேமா | வைரமுத்து படைப்பில் பெண் சமுதாயம் | 257-260 |
| 40. | க. சிவகுமார் | வள்ளலாரின் மானுட சிந்தனைகள் | 261-265 |
| 41. | மு. சசிகலா | வண்ணதாசனின் சிறுகதைகளில் மொழிநடை | 266-270 |
| 42. | க. அருண்குமார் & பெ.தமிழரசன் | விவிலியம் தோன்றிய வரலாறு | 271-274 |
| 43. | சீ. காயத்ரி | சங்க இலக்கியத்தில் பழந்தமிழர்களின் பல்துறை அறிவும் தொழில்நுட்பமும் | 275-279 |
| 44. | நா. கங்கா | குழந்தைகளின் நல்வாழ்விற்கான பொழுதுபோக்குகள்-அன்றும் இன்றும் | 280-287 |
| 45. | P. BASITH ASSARANI | V. M. OBAIDULLAH - A FORMIDABLE PEOPLES LEADER FROM VELLORE | 288-293 |
| 46. | செ. அனுசுயா (எ) பிரியா & கு. சின்னப்பன் | காட்சிமொழி வழி உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தலின் விளைவு - ஓர் ஆய்வு | 294-301 |
| 47. | ஏ. சுஜிதா | வைரமுத்து நாவல்களில் அகத்திணைப் பரிமாணங்கள் | 302-308 |
| 48. | ப. உமாமகேஸ்வரி | புறநானூற்றில் வேளாண்மைத் தொழில்நுட்பம் | 309-313 |
| 49. | க. வீரராகவன் | குறுந்தொகையில் காதல் | 314-319 |
| 50. | த.லெ. அப்துல் கபீர் | மாணவர் நடத்தைசார் பிரச்சினைகளில் "இடையூறு விளைவித்தல்" ஓர் ஆய்வு இரண்டாம் நிலை பிரிவு மாணவர்களை மையமாகக் கொண்டது | 320-328 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# நடுகற்களும் வழிபாட்டு முறைகளும்

**முனைவர் சி. ஆரோக்கிய தனராஜ்**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூயவளனாார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி – 620 002, தமிழ்நாடு இந்தியா.

## முன்னுரை

நடுகல் வரலாறு என்பது மிக நீண்ட நெடிய வரலாற்றுப் பின்புலத்தினைத் தன்னுள் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட நடுகற்கள் எவரின் பொருட்டு வைக்கப்படுகின்றன என்றால் தமது மக்களின் பொருட்டு போரில் ஈடுப்பட்டு விழுப்புண்ணோடு வீரமரணம் அடைந்த வீரர்களின் பெருமைகளைக் குறித்து நடுகற்கள் வைக்கப்பட்டன. ஆவை செவ்வியல் காலமுதல் தற்காலம் வரை மக்களால் எவ்விதம் போற்றிப் பாதுகாத்து வழிபட்டு வந்தனர் என்பதை இக்கட்டுரையில் காணலாம்.

**கலைச்சொற்கள் (Key - words)**

நடுகற்கள் - Hero Stone, செவ்வியல் - Classical, நம்பிகை – Faith, மருப்பு - தந்தம், தெவ்வீர் - பகைவர், விடுவாய் - விடுதல், பூஜை - பூவினால் கடவுளுக்கு வழிபாடு செய்தல், ஆநிரை – பசுக்கூட்டம், மரல் - கற்றாழை, மயிற்பீலி – மயிலின் இறகு.

**ஆய்வுச் சுருக்கம்**

செவ்வியல் காலம் முதல் தற்காலம் வரை அமைந்துள்ள நடுகல் வழிபாட்டு முறை எவ்வாறு இருந்தன என்பதை விளக்குகிறது.

## செவ்வியல் கால நடுகற்களும் வழிபாட்டு முறைகளும்

கடவுள் பற்றிய கொள்கைகள், கோட்பாடுகள், நம்பிக்கைகள் போன்ற தெளிவு பெறாத காலக்கட்டத்தில் வாழ்ந்து வந்த மக்கள் நடுகற்களை வழிபட்ட முறைகளைச் செவ்வியல் இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகிறது. அவற்றை பற்றிய குறிப்புகள் அகநானூறு, புறநானூறு, தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களில் காணப்படுகின்றன.

**"விடுவாய்ச் செங்கனைக் கொடுவில் ஆடவர்**
**நல்நிலைப் பொறித்தகல்"**
**அகம் - (மணி). பா. எ -179.**

ஏன்ற அகநானூற்றுப்பாடல் வரிகளுக்கு இலக்குத் தப்பாமல் விடுகின்ற குருதியாற் சிவந்த அம்புகளையும் வளைந்த வில்லையும் உடையவர் போரின்கண் விழுப்புண்பட்டு வீழ்ந்த மறவருடைய பெயரும் அவரது சிறப்பும் நல்ல நிலைமைகளைப் பொறித்து நடப்பட்ட கல் நிலை என்ற செய்தியின் வாயிலாக் நடுகற்களின் வழிபாட்டு முறைத் தெளிவுவாகின்றது.

மேலும், இது போன்ற செய்தியைப் புறநானூற்றுப்பாடலில் மாங்குடி கிழார் என்பவர் முல்லை நிலத்துச் சிற்றூர் மக்களின் செயல்பாடாக,

**"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலக்கி**
**ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்ததென**
**கல்லே பரவி அல்லது**
**நெய் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே"**
**புறம் - பா. எ – 335**

சிற்றூர் ஒன்றில் வாழும் மக்களின் கடவுள்நிலை பற்றிய இந்தப்பாடலில் வீரர்கள் பகைவர்களைத் தடுத்து அவர்களின் முன்னேற்றத்தை நிறுத்தி கொம்புகளையுடைய ஆண்யானையைக் கொன்று தாமும் விழுப்புண்பட்டு இறந்தனர் என்ற செய்தியினை அறிமுடிகிறது. இந்தப்பாடலுக்கு உரை எழுதிய ஔவை சு. துரைசாமி என்பார் "இச்சிறு குடியுள்ளார்க் கியல்பாயினும், கடவுள் வழிபாட்டில மட்டில் பலவகை கோடல்

இயல்பன்று. ஒருகடவுளையே வழிபடுவர். அக்கடவுள் தானம் கன்னின்ற பெரு வீரராகும்'' என்று குறிப்பிட்டுள்ளமையில் செவ்வியல் கால முல்லை நில இனக்குழு மக்கள் நடுகல்லைத் தவிர வேறொரு கடவுள் இல்லை என்ற அறியமுடிகிறது. இந்நிலையை நடுகற்கள் பற்றிய ஆய்வாளரான ஆ. பிரபு என்பார் குறிப்பிடும் போது ''கடவுள் குறித்த கோட்பாடுகளும் நம்பிக்கைகளும் தீவிரமடையாத காலங்களில் இனக்குழு மக்கள் நடுகற்களை வழிபட்டு வந்தனர் என்றுணர முடிகின்றது.'' **(ஆ. பிரபு, தமிழர் பண்பாட்டுத் தடயங்கள், பாரதி பதிப்பகம், மே – 2017, ப. 56)** என்று குறிப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கதாகின்றன. மேற்கண்ட பாடல்களின் செய்திகளின் அடிப்படையில் செவ்வியல் காலத்தில் வாழ்ந்த இனக்குழுக்கள் தங்களின் பாதுகாப்பின் பொருட்டாகவும், பாதுகாத்த வீரத்தின் பொருட்டாகவும் தமது இனக்குழு மக்களின் மீது அக்கறைக்கொண்டு இனத்திற்காக உயிர்துறந்த வீரனுக்குச் செய்யும் மரியாதையாகவும் செய்நன்றிமறவாப் பண்பினையும் இச்செயல் காட்டுகின்றன என்பதை அறிந்துகொள்ளமுடிகிறது. மேலும், இதே கருத்தையுடைய மற்றொரு பாடலில் **மதுரை அறுவை வணிகன் இளவேட்டன்** என்பார்.

> **''இல்லடு கள்ளின் சில்குடிச் சிறூர்ப்**
> **புடைநட கல்லி னாட்பலி யூட்டி**
> **நன்னீ ராட்டி நெய்ந்நறைக் கொளீஇய**
> **மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்''**
> **புறம் - பா. எ – 329**

இந்தப்பாடலின் செய்திகளைக் குறிப்பிடும் ஔவை சு. துரைசாமி அவர்கள் சிற்றூரில் நடுகற்களுக்கு மகளிர் விடியற்காலத்தில் பலிகளைப் படைப்பர். நடுகற்களை நன்னீராட்டவர். நெய்விளக்கேற்றுவர். நெய்விளக்கின் புகை தெருவெங்கும் மணக்கும் என்று நடுகற்களின் வழிப்பாட்டு முறையைப் புலப்படுத்தியுள்ளார். இதன் அடிப்படையில் செவ்வியல் காலத்தில் நடுகற்களுக்கு அதிகாலையில் வழிபடுகின்ற முறையும் நடுகற்களை நீரினால் தூய்மைப்படுத்தி அதற்கு நெய்யினால்விளக்கேற்றி வழிபாடு செய்யும் பண்பினை இதன்வாயிலாக அறியமுடிகிறது.

இதனைத்தொடர்ந்து நடுகல்லுக்கு எவ்வாறு பூஜை செய்தனர் என்பதை மாங்குடி மருதனார்,

> **''ஒலிமென் கூந்த லொன்னுத லரிவை**
> **நடுகற் கைதொழுது பரவு மொடியாது**
> **விருந்தெரி பெறுகதில் யானே யென்னையும்**
> **ஒ ... வேந்தொடு**
> **நாடுதரு விழுப்பகை யெய்துக வெனவே''**
> **புறம் - பா. எ – 306**

மேற்கண்ட பாடலில் நடுகல்லுக்குப் பூசைகள் செய்து தம்வீட்டிற்கு விருந்தினர் வரவேண்டும், அவர்களுக்கு உணவிட்டு அறத்தைச் செய்வதே தம்கடன் என இல்லற மகளீர் வணங்கியதோடு மட்டும் அல்லாமல் தமக்குப் பகை மன்னர்களும் உண்டாக வேண்டும் என்ற சிந்தைனையோடு மகளிர் நடுகற்களுக்குப் பூசை செய்தனர் என்ற செய்திகள் வெளிப்படையாகின்றன. இதே கருத்தை உடைய செய்திகளைப் புறப்பொருள் வெண்பா மாலையில் 'மூதின் முல்லை' துறையில் வீரப்பெண்களின் செயல்பாடாக,

> ''வந்தபடை நோனாள் வாயின் முலையறிந்த
> வெந்திறல் எ:காம் இறைக்கொளீஇ - முந்தை
> முதல்வர்கல் தான் காட்டி மூதில் மடவாள்
> புதல்வனைச் செல்சென்றாள் போர்க்கு''
> **புறப் பொ. வெ. மா பா. எ – 10: 23**

ஊரகத்தே உள்ள ஒரு சிறு வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த குடிப்பெருமைகளை நிலைநாட்டும் பெண்ணொருத்தி வந்த பகையைச் சிந்திக்காமல் சின்னஞ்சிறு தன்பிள்ளையின் நிலைகளை அறியாமல் வினையாற்றுவதே வீரர்களின் கடமையென்று நினைத்து கையில் வேல்கொடுத்து அவனை அழைத்துச் செல்கிறாள். அப்படிச் சென்றவள் நடுகற்கள் சில நின்றிருக்கும் இடத்திற்கே வருகிறாள். வந்து நின்று அந்நடுகற்களை அவனுக்குச் சுட்டிக்காட்டி ''அவர்களைப் போலவே நீயும் நினது ஆற்றல் காட்டி வேற்றாரை வீழ்த்தி, வெற்றி கண்டு வா! வீரர் கல்லிற்கு உரியராகி விளங்கும் நமது முன்னோர்களின் வீர விளக்காய் சுடராய் நீயும்

விளங்குகிறாய் என்பதை வெங்கனத்தில உறுதிப்படுத்து! இப்பொழுதே போர்க்களம் நோக்கிப் புறப்படுக" என தனது ஒரே மகனுக்கு ஆணையிட்ட செய்தியின் வாயிலாக நடுகற்களின் வழிபாட்டு முறைகள் காணலாகின்றன.

சங்ககாலப் போர் முறைகளில் ஆநிரை கவர்தல் முதல் நிகழ்வாக அமைகிறது. ஓர் அரசன் பகை அரசனிடம் போர் செய்ய விரும்பும் நிலையில் பகை அரசனின் ஆநிரைகளைக் கவர்ந்து செல்வது போரின் தொடக்கம் இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை 'ஆநிரை கவர்தல்' என்று குறிப்பிடுள்ளது.

பகைவர்கள் கவர்ந்து வந்த பசுக்களை (ஆநிரைகள்) மீட்பதற்குக் கரந்தைப் பூவினைச் சூடிச்சென்று போர் செய்த நிலையை **'ஆநிரை மீட்டல்'** என்று அழைப்பர். இதனைத் தொல்காப்பியர் **'பூசல்'** என்னும் தலைப்பில் செய்திகளைத் தந்துள்ளார். மேற்கண்ட சூழலில் ஆநிரைகளை மீட்டு தன் உயிர் ஈந்த போர் வீரர்களுக்கு நடப்படுகின்ற கற்களைப் பற்றிய செய்திகளாக உறையூர் இளம் பொன் வணிகனார் புறநானூற்றுப்பாடலில்,

"பரலுழை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொ
டணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்து
தினிநட் டனரே கல்லுங்"

புறம். பா. எ – 264.

என்ற பாடலின் வாயிலாக ஆநிரைகளை மீட்டு அதன்பின் உயிர் துறந்த வீரன் இறந்துபட்ட நிலையில் அவனைப் புதைத்த இடத்தில் நடுகற்கள் நட்டு அந்தக்கல்லுக்கு எவ்விதமான மாலை அணிவித்தனர் என்றால் கிராமத்தில் தமிழர் திருவிழாவான பொங்கல் விழாக்காலங்களில் காட்டில் உள்ள கற்றாழையின் இதழ்களைச் சேகரித்து அதன் நுனியில் உள்ள முள்ளை நீக்கி சிறுசிறு கட்டுகளாகக் கட்டி நீர் நிறைந்த இடங்களில் ஒரு வாரகாலம் ஊரவைத்து பிறகு அதனைக் கையால் ஊறிய பகுதிகளை நீக்கி சூரிய ஒளியில் காயவைத்து நாராக உருவாக்கி அதற்கு பலவகை வர்ணங்கள் ஏற்றி அவற்றில் மாலை செய்து தற்காலத்தில் மாட்டின் கழுத்தில் கட்டுவர். அதனைப்போன்று செய்து நடுகற்களில் மாலையாகவும் அதனைச் சுற்றி அழகுபடுத்திய நிலையும் அவ்விரனின் பெயரையும் புகழையும் பொறித்து நிலை இப்பாடலின் வாயிலாகப் புலனாகிறது. இதே பாடலின் செய்திகளாகப் புறநானூற்று 'கையறுநிலை' பாடலில்,

**"கல்லா விளையர் நீங்க நீங்கான்
வில்லுமிழ் கடுங்கனை மூழ்கக்
கொல்புனற் சிறையின் விலங்கியோன்
கல்லே"**

புறம். பா. எ – 263.

பகைவரிடமிருந்து வீரர்கள் ஆநிரைகளை மீட்டு வரும்போது அவர்களுக்கு அஞ்சாமல் வெள்ளத்தைத் தடுத்தாற்போல எதிர்த்து நின்று அம்புகளால் துளைக்கப்பட்டு உயிர் மாண்டான் அதனால் ஊரார் அவர் பெயரையும் புகழையும் பொறித்து நடுகல் வைத்து வழிப்பட்டனர். அத்தோடுல்லாமல் அவ்வழிச் செல்லும் பாணனிடம் அவ்வழியில் உள்ள நடுகல்லை வழிபடுபவையேல் உன் வாழ்வு வளமுடையதாக அமையும் என்று அப்பாடல் செய்திகள் விளக்குகின்றன. மேலும், திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரும் கூட நடுகற்கள் பற்றிய செய்தியாகப் **'படைச் செருக்கு'** என்னும் அதிகாரத்தில்,

**"என்னைமுன் நில்லன்மின் தெவ்வீர்
பலர்என்னை
முன்நின்று கல்நின் றவர்"** கு. எ – 774

திருவள்ளுவரும் நடுகற்கள் என்ற அமைப்பில் வீரம் மிகுந்த என் மன்னனின் முன்னர் பகைவர்களே நிற்காதீர்கள் அவ்வாறு முன் நின்றவர்கள் இப்பொழுது கல்லிலே எழுதப்பட்டு நிற்கின்றார் என்ற அறிவுறுத்தல் அமைப்பில் செய்திகளை இயம்புவதாக மணக்குடவர் உரைசெய்கின்றார்.

## நடுகற்களும் போர்வீரர்களுக்கு வழங்கப்படும் விருதுகளும்

இன்றைய சூழலில் இந்திய திருநாட்டில் இராணுவத்தில் பணியாற்றும் வீரர்கள் தீவிரவாதிகளுடனோ, அண்டைநாடுகளுடனோ

ஏற்படுகின்ற சண்டை (அல்லது) போர்நிகழ்வுகளில் போராடி இறக்க நேரிட்டாலும் அல்லது சூழலுக்கு ஏற்ப தனிமனிதனாக நின்று போரிட்டு சாதனைகள் புரிந்தாலும் அவருடைய இறப்பையும், சாதனை நிகழ்வையும் பாராட்டி நம் நாட்டின் மத்திய, மாநில அரசுகளால் **'விருதுகள்'** வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவரான எம். கே. மதலைமுத்து என்பவர் **இந்தியா - பாகிஸ்தான்** இடையே ஏற்பட்ட போரில் வீரமரணம் அடைந்தற்காவும் அவருடைய சாதனையைப் பாராட்டியும் அவருக்கு இந்திய அரசாங்கம் 1965இல் நடைப்பெற்ற 'குடியரசு தினத்தில் **'வீர் சக்கரா'** என்ற விருதினைக் கொடுத்து பெருமை செய்தது. அதுமட்டுமின்றி திருச்சியை அடுத்த இலால்குடி தொடர்வண்டி நிலையத்தில் அவருக்கு நினைவுத் தூணும் அதில் அவரது உருவப்படமும் வைத்து சிறப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல் மேஜர் எம். சரவணன் என்பவர் இந்தியாவிற்கு எதிரான **'கார்கில் போரில்'** வீர மரணம் அடைந்த நிலையில் அவரின் பெருமைகளைப் பாராட்டி 1999இல் **'வீர் சக்கரா'** விருது கொடுத்து சிறப்பு செய்தும் திருச்சிராப்பள்ளியின் மத்திய பேருந்து நிலையத்தின் நிலைத்தின் அருகில் உள்ள வெஸ்டிரி பள்ளியின் எதிர்புறத்தில் நினைத்தூணும் உருவப்படமும் வைக்கப்பட்டுள்ளது. ஒப்பீட்டுப்பார்க்கையில் செவ்வியல் கால மக்களின் செயல்பாடுகள் போல இருப்பது சிறப்பு.

## முடிவுரை

சங்க காலம் முதல் தற்காலம் வரை வீரத்திற்குத் தனியிடம் உண்டு. ஏனென்றால், சங்க இலக்கியம் காதலையும் வீரத்தையும் இருகண்கள் எனப் போற்றிய விதத்தை வீரயுகக்காலத்தில் காணமுடிகிறது. அதன் தொடர்ச்சியாக நாட்டிற்காகவும், தன் இனக்குழு மக்களுக்காகவும் போராடி தன் இன்னுயிரை ஈந்த வீரனை வணங்கி நாளடைவில் அவ்வீரனைக் கடவுளாக வழிபட்ட நிலையைத் தற்காலத்தில் விருதுகள் மற்றும் நினைவுத்தூண் வாயிலாக வீரத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுவதை இந்திய நாடு வழக்கமாகக் கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் திருச்சியில் உள்ள சில சான்றோர்களை நினைத்துப்பார்ப்பதற்கு ஏதுவாக எம். கே. மதலைமுத்து மற்றும் மேஜர் எம். சரவணன் ஆகியோர்க்கு நினைவுத்தூண் மற்றும் இருவருக்கும் **'வீரசக்ரா'** என்ற உயரிய விருதினை வழங்கி அவர்களுடைய நினைவுநாளில் அக்குடும்பத்தினரை அழைத்துப் பாராட்டும் முறையானது சங்க காலத்தின் எச்சமாக காணமுடிகிறது.

## துணைநின்ற நூல்கள்


1. பெ. அர்த்த நாரீசுவரன், கல்வெட்டுவழிப் பண்பாட்டியல், ராமையர் பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்கம், 3, ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை சென்னை-600 014, 2016.
2. தி. தண்டபாணி, புறப்பொருள் காட்சிகள், நான்மணிப் பதிப்பகம், 31, 26ஆம் குறுக்குத் தெரு, பெசண்ட் நகர், சென்னை-600 090. 2001.
3. ஆ. பிரபு- சமூகப் பண்பாட்டு நோக்கில் சங்ககாலச் சிற்றூர் வாழ்வியல், சொல்லங்காடி, 10, கல்யாண சுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை – 600 011. பிப்ரவரி – 2017.
4. பொ. வே. சோமசுந்தரனார் (உ.ஆ), அகநானூறு – (மணிமிடைபவளம், நித்திலக்கோவை), தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், சென்னை – 1, 1973.
5. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, புறநானூறு - 1, 2, செவ்வியல் கருவூலம் (சங்க இலக்கியம்), தமிழ்மண் அறக்கட்டளை, "பெரியார் குடில்", செவாலியே சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர், சென்னை-600 017, 2018.
6. பொ.வே சோமசுந்தரனார், புறப்பொருள் வெண்பாமாலை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 154, டி, டி கே சாலை, சென்னை-14. 2002, 2004.
7. நவீனத் தமிழாய்வு(பன்னாட்டு பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்), (அக்டோபர் - டிசம்பர் 2017),
8. Gallantryawards.gov.in 02/12/2020.


௸